செய்தி குறிப்பு எண்.179 நாள். 31.12.2007

## மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் புத்தாண்டுத் திருநாள் வாழ்த்துச் செய்தி

புத்தாண்டு 2008 பிறக்கிறது. தமிழகத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதில் உறுதுணையாக அமைந்த 2007ஆம் ஆண்டிற்கு நன்றி கூறி, 2008ஆம் ஆண்டை நம்பிக்கையுடன் வரவேற்கும் வேளையில், தமிழக மக்கள் அனைவருக்கும் என் இதயம் கனிந்த புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராசர், அண்ணல் அம்பேத்கர் ஆகிய பெருமக்களின் கோட்பாடுகளும், கொள்கைகளும் உறுதுணையாக வந்து தோள்வலிமை தந்திட, கடமையாற்றும் வழியில் கிடக்கும் தடைகளை அகற்றி முன்னேற்றப் பாதையில் என்னருமைத் தமிழ்க் குடிமக்களை வழிநடத்திட வேண்டும் என்னும் உணர்வு உந்த, அல்லும் பகலும் அயராமல் பணியாற்றுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளது இந்த அரசு; அதனால்தான் 'காலம் பொன்போன்றது; கடமை கண்போன்றது' என்பதைக் கணந்தோறும் எண்ணி, 2006இல் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் புதிய வரிவிதிப்பு எதுவுமின்றி,

–கிலோ அரிசி இரண்டு ரூபாய் ;
–விவசாயிகளின் துயர்தீர 7000 கோடி ரூபாய் கடன் தள்ளுபடி ;
–நிலமற்ற ஏழை விவசாயி–விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம் ;
–குழந்தைகளுக்கு வாரம் மூன்றுமுறை முட்டைகள் ;
–ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு 6000 ரூபாய் நிதியுதவி ;
–ஏழைப் பெண்களின் திருமணத்திற்கு 15 ஆயிரம் ரூபாய் நிதி உதவி ;
–ஏழைத் தாய்மார் மகிழ இலவச வண்ணத் தொலைக் காட்சிப் பெட்டிகள் ;
– எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள் ;
–வேலை வாய்ப்பற்ற படித்த இளைஞர்களுக்கு உதவித் தொகைகள் ;
– அரசுத் துறைகளில் 2 இலட்சத்து 28 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புதிய நியமனங்கள் ;
–11 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில், ஏறத்தாழ 1 இலட்சத்து 25 ஆயிரம் படித்த இளைஞர்கள் வேலைவாய்ப்புப் பெற புதிய தொழிற்சாலைகள் ;
–கிராமங்களும், பேரூராட்சிகளும் அடிப்படை வசதிகளைப் பெற 'அனைத்துக் கிராம / பேரூராட்சி அண்ணா மறுமலர்ச்சித் திட்டங்கள்'
–நாடு, நகரம் எங்கும் சாலை வேலைகள்–பாலப் பணிகள்– பாதாள சாக்கடைத் திட்டங்கள் – குடிநீர்த் திட்டங்கள் !
–மருத்துவ முகாம்கள் மூலம் வருமுன் காத்திடும் மருத்துவ உதவிகள் !

**–நுழைவுத் தேர்வு ரத்து, புதிய கல்லூரிகள் போன்ற கல்வி வளர்ச்சிப் பணிகள்!**
**– இலட்சக் கணக்கான அமைப்பு சாராத் தொழிலாளர் குடும்ப நலன்கள்**

**– எனப் பல்வேறு திட்டங்களை உருவாக்குவதிலும், செயல்படுத்துவதிலும் மிகுந்த முனைப்புடன் தமிழக அரசு செயல்பட்டு, அவற்றின் மூலம் ஏழை எளியோர் நலன் பெற்று வருவதை எல்லோரும் அறிவர்.**

**அருமைத் தமிழ் மக்கள்மகிழ, தமிழகம் மேலும் மேன்மை பெற வரும் 2008ஆம் ஆண்டிலும் புதிய திட்டங்களை, வளர்ச்சிப் பணிகளைத் தொடர்வோம்! தொடர்ந்து உழைத்திடுவோம்! தமிழகத்தை உயர்த்திடுவோம்! எனும் உறுதியோடு, தமிழக மக்களுக்கு மீண்டும் எனது புத்தாண்டு நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–**9.**